**IN THE COURT OF THE DISTRICT MUNSIF COURT, ERANIEL**

**O.S. 42/2023** **...1..** **தேதி -17.11.2023**

**PW1- செல்லம்மாள்**

**குறுக்கு விசாரணை**

1. எனது பிரமாண வாக்குமூலத்தை யார் தயார் செய்து கொடுத்தார்கள் என்றால் எனது வழக்கறிஞர். வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். எனது மகனுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் நியாபகம் இல்லை. எனது மகனுக்கு எனது கணவர் எழுதி வைத்த ஆவணம் எந்த வருடம் என்றால் நியாபகம் இல்லை. எனது மகனுக்கும் மகளுக்கும் எனது கணவர் எழுதி வைத்த ஆவணத்தைப் பற்றி கணினி வழியில் பார்த்தேன் என்று கூறியுள்ளேன் எப்போது என்றால் நியாபகம் இல்லை. எனது மகனுக்கு எனது கணவர் எழுதி கொடுத்த ஆவணத்தில் எனது கணவரின் புகைப்படம் உள்ளது என்று சொன்னால் பார்க்கவில்லை.

2. கணினி வழி மூலம் ஈ.சி.-யைப் பார்த்ததாக கூறியுள்ளேன். மேற்படி ஈ.சி.யைத் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஈ.சி.யை சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற பாகப்பிரிவினை வழக்கிலாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. வீட்டு வரி, கர ரசீது யாருடைய பெயரில் உள்ளது என்றால் எனது மகள் மற்றும் மகன் பெயரில் உள்ளது. கடன் வசூல் தீர்ப்பாயம், மதுரையில் இ.ம.எண் 1728/23-இல் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவு பற்றி தெரியுமா என்றால் தெரியாது. நீதிமன்ற ஆணையர் வரும்போது நான் வீட்டில் இருந்தேனா என்றால் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன்.

3. நான் தற்போது யாரோடு வந்துள்ளேன் என்றால் எனது மருமகன் ஆட்டோவில் ஏற்றிவிட்டார். எனது மகனின் வீடு தற்போதும் பூட்டிய நிலையில் உள்ளதா என்றால் பூட்டவில்லை. மேற்படி வீடு தலைமை குற்றவியல் நடுவரால் கு.ப.ம.எண். 1316/2023-இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி நீதிமன்ற ஆணையர் எனது மகனின் வீட்டின் அனுபவத்தை எடுத்து பூட்டிவிட்டு எதிர் மனுதாரரிடம் சாவியை கொடுத்துவிட்டு அவரது அறிக்கையை மேற்படி நீதிமன்றத்தில் கடந்த 08.09.2023 அன்று தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் தெரியாது. நானும் எனது பிள்ளைகளும் சேர்ந்து பிரதிவாதி நிறுவனத்தை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தான் சார்பு நீதிமன்றத்தில் பாக வழக்கு எண்-36/2020 என்ற வழக்கை பிரதிவாதியை கட்சி சேர்க்காமல் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் மூலமும் பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தான் பிரதிவாதிக்கு எதிராக பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்.